# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஆத்தூர்

## முதலேற்பு வழக்கு எண். 279/2021

| | |
|---|---|
| **சான்றாளரின் பெயர்** | திரு. ரங்கசாமி |
| **சான்றாளரின் வரிசை எண்** | பி.வா.சா - 1 (DW - 1 ) |
| **தேதி** | 02.04.2026. |

### வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி சேகர் என் இரண்டாவது மகன் என்றால் சரிதான். மனைவி பெயர் ஜெகதாம்பாள். இரண்டு ஆண் குழந்தைகள் தவிர வேறு குழந்தைகள் எனக்கு இல்லை. அப்பா பெயர் ராமசாமி கவுண்டர். தாத்தா பெயர் காங்கேயன். நாமக்கல் மாவட்டம் பாய்ச்சல் என்ற கிராமத்தில் இருந்து வந்துள்ளோம் என்றால் சரிதான். அப்பா இராமசாமியுடன் பிறந்தவர்கள் வேலப்ப கவுண்டர் மற்றும் சாமியார் என்கிற நல்லியப்ப கவுண்டர். சாமியார் என்கிற நல்லியப்ப கவுண்டர் கோவிந்தம்பாளையம் கிராமத்தில் இருந்தார். அங்குதான் அவரது நிலங்கள் இருக்கிறது. வேலப்ப கவுண்டர் பெரம்பலூர் மாவட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் வசித்து வந்தார். அவருக்கு அங்குதான் நிலங்களும் அவரது வாரிசுகளும் இருக்கிறார்கள். எனது அப்பா சார்வாய்புதூரில் வசித்து சொத்துக்களை அனுபவித்து வந்தார். சார்வாய்புதூர் எங்கள் பூர்வீகம் கிடையாது. பாய்ச்சலில் வயக்காட்டார் என்கிற முத்துசாமி கவுண்டரை கேள்விப்பட்டுள்ளேன். எனது அப்பா மற்றும் அவரது முன்னோர்கள் உடன்பிறப்புக்கள் பாய்ச்சலில் இருந்த சொத்தை வயக்காட்டார் என்கிற முத்துசாமி கவுண்டருக்கு விற்றுவிட்டு வந்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் ஆசிரியராக 1968 ல் தருமபுரியில் வேலைக்கு சேர்ந்தேன். 09.07.1964 ல் எனது அப்பா சொத்துக்களை எங்களுக்கு பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சகோதரர்கள் நால்வர் மற்றும் அப்பா ஆகிய ஐவருக்கும் தலா ஒரு பாகம் பிரித்துக்கொண்டோம். பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்ல வழக்கறிஞர் தயாரித்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். 1969 தேதியிட்ட கிரய பத்திரம் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தட்டச்சு பிழையாகும். அது 1968 ல் வாங்கப்பட்டது. முதல் மகன் செந்தில் SSLC- யில் தேர்சி பெறவில்லை என்னுடன் இருந்து விவசாயம் செய்து வந்தார். அவருக்கு முதல் திருமணம் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது. அதில் வெங்கடேஷ் என்ற ஒரு மகன் பிறந்தார்.

எங்களுடன் இல்லை அம்மாவின் பெற்றோருடன் வசித்து வருகிறார், வந்து செல்வான். என் மகனுக்கு இரண்டாவது திருமணம் ஜெயந்தி என்பவருடன் நடந்தது. அவர்களுக்கு கிஷோர் என்ற மகன் இருக்கிறார். அதனால் செந்திலுக்கு இரண்டு ஆண் வாரிசுகள் உள்ளனர். வாதி சேகர் ஆத்தூரில் இளங்கலை படித்தார். பிறகு அரசு கல்லூரியில் முதுகலை படித்தார். அவர் ஆசிரியராக தேர்ச்சி பெற்று வேலைக்கு சேர்ந்தார். என் மகன் வேலைக்கு சேர ரூ.10,00,000/- கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் தகுதியின் அடிப்படையில் வேலைக்கு சேர்ந்தார் என்றும் நான் வழக்கிற்காக பணம் கொடுத்து சேர்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் சேகர் அரசு கல்லூரியில் படித்தால் எந்த செலவும் இல்லை என்றும் நான் ரூ.10,00,000/- செலவு செய்து படிக்க வைத்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் திருமணத்திற்கு முன்பே ஆசிரியர் பணிக்கான உத்தரவு வந்தது. திருமணத்திற்கு ரூ.10,00,000/- செலவு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் திருமணத்தின் போது எனக்கு வயது 36 வயது இருக்கலாம். பிறந்த வருடம் 1942.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before / by me in open court
and read over / interpreted to the witness
and acknowledged by him / her to be
correct.

(Sd/-V.Ravichandran)
Additional District Judge , Attur.